PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# பாரதிராஜா திரைப்படங்களில் கட்டியக்காரன் தன்மைகளின் வெளிப்பாடுகள் - ஒருஆய்வு

**ப. சங்கீதா & முனைவர் சுஜாதா மோகன்**
இசை மற்றும் நுண்கலைப் பிரிவு, விஸ்டாஸ், சென்னை - 600 117.
தொடர்புடைய ஆசிரியர் : srisangeethalaya2002@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

கட்டியக்காரன் என்பவன் பொதுவாக நாடகங்களில் , தெருக்கூத்தில் காணப்படும் மிக முக்கியமான கதாப்பாத்திரம் ஆவான். இக்கதாப்பாத்திரத்தின் தன்மைகளாவன : நாடகத்தின் ஆரம்பத்தின் முதல் பாத்திரமாக வருதல் , நாடகத்தின் கதையை முன்னறிவித்தல் , நாடகத்தின் கதாப்பாத்திரங்களை அறிமுகம் செய்தல், காட்சிகளைப் பற்றி கூறுதல், காட்சிகளை இணைத்து மக்களிடையே நேரடியாகப் பேசுதல் இன்ன பிற. இயல் , இசை மற்றும் நாடகம் இவற்றிற்கு அடுத்ததாக காலப்போக்கில் விஞ்ஞான , தொழில் நுட்ப உபகரணங்களுடன் கதைகளை கருத்துடனும் மக்களுக்குச் சேர்க்கும் மிகப்பெரிய மிகவும் விரும்பத்தக்க பொழுதுபோக்கே திரைப்படம் அல்லது வெள்ளித்திரை ஆகும். திரைப்படத்தில் இயக்குனர் என்னும் நபரே ஒரு கதை திரைக்கதையாகி பார்வையாளர்களிடம் நேர்த்தியாக சென்று சேர வைப்பவர்.

இயக்குனர் பாரதிராஜா அவர்களின் பெரும்பாலான கதைகள் கிராமப்புறங்களை மையமாகக் கொண்டதை காணலாம். பாரதிராஜாவின் படங்களைப் பார்க்கும் மக்களுக்கு கிராமத்துக்கே சென்ற அனுபவத்தை தந்திருப்பார். பட்டி தொட்டி மக்களின் எதார்த்தமான உண்மைகளைப் படம் பிடித்துக் காட்டி இருப்பார். இந்தத் தன்மை போலவே கட்டியக்காரனை தெருக்கூத்தில் பொதுவாக இதிகாசங்கள் , காவிய புராணக் கதைகளை மையமாகக் கொண்ட நாடகங்களில் பார்க்கலாம். நாடகங்களை பார்க்கும் மக்களை ஒரு சக்கரவர்த்தியாகவோ

ISSN: 2582-9513

மகாராணியாகவோ எண்ணும் அளவிற்கான அனுபவத்தையும் பூலோகம் முதல் தேவலோகம் வரை சென்று வந்த அனுபவத்தைத் தன் பேச்சுத்திறன் மூலம் மக்களுக்கு கட்டியக்காரன் தந்திருப்பார். கட்டியக்காரனும் இயக்குனரும் இருவேறுபட்ட காலத்தை சார்ந்து இருந்தாலும் இருவரும் மக்களுக்கு கதையை கொண்டு செல்லும் முக்கியத் தன்மையை மையமாகக் கொண்டுள்ளனர். இயக்குனர்களின் முன்மாதிரியாக கட்டியக்காரன் விளங்கி இருக்கிறார். கட்டியக்காரனின் தன்மைகள், பாரதிராஜா இயக்கிய திரைப்படங்களில் வெளிப்படுவது இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

கட்டியக்காரன், பாரதிராஜா, தெருக்கூத்து, திரைப்படங்கள், நாடகம், கதாப்பாத்திரம், இயக்குனர், திரைக்கதை.

## முன்னுரை

கட்டியக்காரன் என்பவன் நாட்டிய நாடகங்கள் , தெருக்கூத்து நாடகங்கள் என பல நாடகங்களில் காணப்படும் முதன்மையான கதாப்பாத்திரம் ஆகும். நாடகத்தின் ஆரம்பம் முதல் நிறைவு வரை வருபவன் கட்டியக்காரன். மேலும் நாடகத்தை வழி நடத்துபவன் ; நாடகத்தின் கதையை கதாபாத்திரங்களை முன்னறிவிப்பவன். இயக்குனர் என்பவர் பொதுவாக திரைப்படங்களில் உருவாக்கத்தில் முக்கியமானவர். இயக்குனர்கள்தான் திரைப்படத்தை உருவாக்குபவர்கள். திரைப்படத் தயாரிப்பாளர்களுடன் இணைந்து கதையை வழி நடத்துபவர்கள். ஆரம்பம் முதல் நிறைவு வரை திரைக்கதையை செயல்படுத்துபவர்கள். கதை மற்றும் கதைக்கருவை பார்வையாளர்களிடம் சிறப்பாக சென்று சேர்க்கும் முக்கிய நபர் இயக்குனர் ஆவார்.

## தெருக்கூத்து நாடகங்கள் திரைப்படமாக வளர்ச்சி பெறுதல்

எழுத்தாளர் எம். சண்முகம்பிள்ளை தமிழில் , ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் தெருக்கூத்தின் முன்மாதிரியான வடிவமாக உள்ளது என்கிறார். இவ்வாறாக உள் அரங்குகளில் நாடகக் கதாபாத்திரங்களுடன் நடிப்பு , உரைநடை, பாடல் காட்சிகள் என நேரடியாக நடத்தப்பட்ட நாடகங்கள் , கால வளர்ச்சியில்

ISSN: 2582-9513

தொழில்நுட்ப உபகரணங்கள் உதவியுடன் திரையில் திரைக்காட்சிகளாக வெளிவந்தன.

## கட்டியக்காரன் கதாபாத்திரத் தன்மைகள் :

தெருக்கூத்து நாடகங்கள் இரவு முழுவதும் நடத்தப்படும். இந்த கூத்து மூன்று தெருக்கள் சந்திக்கும் இடத்தில் கிராம மக்களுக்கு கோயில் திருவிழாவை ஒட்டி கடவுள் பூஜைகள் கடைப்பிடிக்கப்பட்ட பின் தெருக்கூத்து நாடக கலைஞர்களால் முறையாக தொடங்கப்படும். தெருக்கூத்தின் முதல் தொடக்கமே

"வந்தேன் இதன்ன பாருங்க கட்டியக்காரன்

வாரேன் இதன்ன பாருங்க கட்டியக்காரன் " என்று கணீர் குரலில் உற்சாகம் பெருக அறிமுகமாகி "அண்டம் நடுநடுங்க ஆகாசம் கிடுகிடுங்க நான் இங்கு வந்தேனே , கட்டி ஆள வந்தேனே " என்பதாய் அமையும். கிராமப்புறங்களில் பிறந்து வாழ்கின்ற மக்கள் அனைவரும் இந்தப் பாடலை கேட்டிருப்பர். இப்படியாக கட்டியக்காரன் அறிமுகம் தொடங்கும். அதன்பின் நாடகத்தின் கதை , கரு என மக்களுக்கு புரியும் வகையில் முன்னறிவித்து, கட்டியம் சொல்லி, கதையின் நாயகன், நாயகி மற்றபிற நாடகத்தின் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தி , நாடகத்தைத் தொடக்கி வைப்பான். நாடகங்களின் இயல்பு , எந்த காலத்தைச் சார்ந்தது , எந்தெந்த ஊர்களை மையமாகக் கொண்டது , அந்த ஊர்களின் வளம் , செழிப்பு, சிறப்பு, வரலாறு மற்றும் பெருமைகளை எடுத்துரைபவன் கட்டியக்காரன். எடுத்துக்காட்டாக 'பாண்டிய நாடு' எனக் கூறும் பொழுதே "பாண்டிய மன்னர்கள் ஆட்சி தேசம் , மிக உயர்ந்த பொதிகைமலை கொண்ட நாடு , வைகை நதி பாய்ந்தோடும் நாடு , நெல், வாழை, கரும்பு, பருத்தி விளையும் செழிப்புமிக்க நாடு , முத்து விளையும் பூமி , மீன் கொடியை சின்னமாகக் கொண்ட எங்கள் பாண்டிய நாட்டிலே ".... என்று நாட்டின் சிறப்புகளை சிறப்பாக கூறுபவன் கட்டியக்காரன். ரசிகப் பெருமக்களுடன் நேரிடையாகத் தொடர்பு கொள்பவன். தன் குரல் மூலமாகவும் கதை கருத்துக்களை எடுத்து உரைப்பவன். அரங்கில் முன்னும் பின்னும் இருந்தும் செயல்படுபவன். கட்டியக்காரன் தன் கருத்துகளை வசனமாகவும் உரை நடையாகவும் பாடலாகவும் நடித்தும் கூட தெரிவிப்பான். மக்களுக்கு புரியும் வகையில் வழக்கு நடையில் உரைப்பான். நாடகத்தின் கதாபாத்திரங்களுடன் உரையாடுதல் , காட்சி

ISSN: 2582-9513

விளக்கம், காட்சி இணைப்பு, மக்களை சிரிக்க வைத்து சிந்திக்க வைத்தல் என நாடகம் முழுமையும் செயல்படுவான். நாடக கருத்தை மக்களின் மனதில் பரிபூரணமாக புரியவைத்து நிறைவாக்கி அழுத்தமாக பதிய வைத்து மனநிறைவுடன் நன்றிகூறி நாடகத்தை முடித்து வைப்பான் கட்டியக்காரன். நாட்டிய நாடகத்தில் காணப்படும் கட்டியக்காரன் கூத்தில் காணப்படுவது போல் நாடகத்தின் தொடக்கத்தில் தோன்றுவான். இந்த நாடகத்தின் கதாபாத்திரங்களை அறிமுகம் செய்வான். இவன் பொதுவாக இசைக்கலைஞர்கள் இசைக்கும் பாரம்பரிய பாடல்களுக்கு பாவம் , நடிப்பு என தாளத்தோடு செயல்படுவான். சிங்கா சிங்கியுடன் இணைந்து நகைச்சுவையாகவும் செயல்படுவான்.

## தன் படங்களில் கட்டியக்காரனாக இயக்குனர் இமயம் பாரதிராஜா

திரு பாரதிராஜா அவர்கள் ஜூலை மாதம் 17ஆம் தேதி 1941இல் தேனியில் அல்லிநகரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் தமிழ்த் திரைப்பட இயக்குனர் ஆவார். இவர் கிராமங்களை மையமாகக் கொண்டு உணர்வுபூர்வமான படைப்புகளை இயக்குவதில் தனித்துவமான இயக்குனர் என்ற முத்திரையைப் பதித்தவர். இவர் இயக்கிய முதல் தமிழ் படம் ‘16 வயதினிலே’. இப்படத்தின் திரைக்கதையை எழுதியவரும் இவரே. இப்படம் முதற்கொண்டு திரைக்கதையை தன் சொந்த குரலில் , கதையின் முன்னோட்டத்தை “யார் வரவை எதிர்நோக்கி ஏக்கத்தோடு காத்திருக்கிறது இந்த இளம் விழிகள் ; கார்கால மேகமாக மாறி நிற்கும் இந்த விழி மேடையில் ஏதோ ஒரு சோக காவியத்தின் சுவடுகள் தெரிகிறது அல்லவா! அந்த சுவடுகளின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியாக இருப்பினும் இறந்தகாலம் இனிமையானது ஒரு ராகமாலிகை” என்று ஒலிக்கும்போது கதாநாயகி ரயில்வே நிறுத்தத்தில் கண்களில் கண்ணீர் ததும்ப யாரையோ தேடிக் கொண்டிருப்பாள். திரு பாரதிராஜாவின் வசனங்கள் மக்களுக்கு நேரடியாக கூறப்படுவது பார்வையாளர் அனைவரையும் படம் பார்க்கும் எதிர்பார்ப்பை தூண்டுகிறது. ஆவலோடு திரைப்படத்துடன் இணைகிறார்கள்.

மேலும் இது பாரதிராஜா கதையின் முன்னோட்டத்திற்குப் பிறகு இசையுடன் 16 வயதினிலே என தமிழ் எழுத்துக்களுடன் திரைப்படத்தின்

ISSN: 2582-9513

பெயர் இசை ஒலிக்க காட்சியில் தெரிகிறது. இவ்வாறாக வருவது கட்டியக்காரன் தன்மையான 'நாடகத்தின் முதலில் கட்டியக்காரன் நாடக கதையை முன்னறிவிப்பதை வெளிப்படுகிறது. எளிமையாகப் புரியும்படி பார்வையாளர்களுக்கு இவ்வசனங்கள் அமைகின்றன. பிறகு மீண்டும் பாரதிராஜாவின் குரலில் "இந்த ராகத்திற்கு சுருதி கூட்டிய உள்ளங்கள் " என்று கதாப்பாத்திரங்களின் அறிமுகமும் தொடர்கிறது. பொதுவாக நடிகர் நடிகைகளின் உண்மைப் பெயர் திரைப்படங்களில் வெளிப்படும். ஆனால் இந்தப் படத்திலோ திரைப்படத்தின் கதாநாயகனை , திரு. கமலஹாசன் என்ற உண்மைப் பெயருக்கு பதிலாக திரைப்பட பாத்திரமான சப்பாணி என்றும் கதாநாயகி திருமதி. ஸ்ரீதேவியை மயில் என்றும், வில்லன் திரு. ரஜினிகாந்தைப் பரட்டை என்றும் எழுத்து வடிவில் திரையில் நடிக்கும் கலைஞர்கள் உருவம் தெரிய அனைவருக்கும் கதாப்பாத்திரங்கள் அறிமுகம் ஆகின்றன.

இவ்வாறான கட்டியக்காரன் தன்மையான கதாபாத்திரங்கள் அறிமுகம் மற்றும் தெருக்கூத்தில் வருவதுபோல் நாடக நடிகர்கள் உண்மைப் பெயர் சொல்லாமல் நாடகப் பாத்திரங்கள் பெயர்கள் அறிமுகப் படுத்தப்படுவது , 16 வயதினிலே படத்தில் வெளிப்படுவது , குறிப்பிடப்படுகிறது. திரைப்படத்தின் நிறைவில் எழுத்துவடிவில் 'நிச்சயம் சப்பாணி வருவான்; மயிலின் வாழ்வும் மலரும்' என்று திரைக்காட்சியில் வந்த பிறகு திரைப்படம் நிறைவு பெறுகிறது. கட்டியக்காரனின் தன்மைகளில் ஒன்றான கதைக்கருவை சுருங்கச் சொல்வது ,16 வயதினிலே படத்தில் சொல்லப்பட்டது போல் பாரதிராஜாவின் பலத் திரைப்படங்களிலும் வெளிப்படுவது பின்வருமாறு :

| வ. எண் | வருடம் | திரைப்படத்தின் பெயர் | கதைக்கரு |
|---|---|---|---|
| 1. | 1977 | 16 வயதினிலே | 16 வயதுடைய இளம் பெண்ணின் காதல் மற்றும் வாழ்க்கை |
| 2. | 1981 | அலைகள் ஓய்வதில்லை | சாதி மத கலப்பு திருமணம் |
| 3. | 1983 | மண்வாசனை | ஒரு கிராமத்தில் நடந்த உண்மை சம்பவம் மற்றும் பெண்ணின் |

| | | | |
|---|---|---|---|
| | | | பெருமையான கற்பு |
| 4. | 1986 | கடலோரக் கவிதைகள் | கால தேச தூரங்களை கடந்தது காதல் |
| 5. | 1987 | வேதம் புதிது | மனிதத்துவம் மறந்த சாதி மதச் சடங்குகளைச் சாடுதல் |
| 6. | 1990 | என் உயிர்த் தோழன் | அறியாமை அநீதி களைதல் |
| 7. | 1991 | புது நெல்லு புது நாத்து | கிராமத்துத் தன்மான தமிழ் தாயின் உணர்வு |
| 8. | 1992 | நாடோடி தென்றல் | உண்மைக் காதல் மரணத்தையும் வெல்லும் |
| 9. | 1993 | கேப்டன் மகள் | தேசத்திற்கு பல தியாகங்களே அஸ்திவாரம் |
| 10. | 1993 | கிழக்குச் சீமையிலே | விட்டுக் கொடுத்து வாழும் உணர்வை பாசமிகு அண்ணன் தங்கை மூலம் விளக்குதல் |
| 11. | 1994 | கருத்தம்மா | பெண் சிசுவதை எதிர்ப்பு மற்றும் பெண் விடுதலை |
| 12. | 1995 | பசும்பொன் | விதவை மறுமணம் மற்றும் தாயின் பெருமை உணர்வு |
| 13. | 1996 | தமிழ்ச்செல்வன் | ஊழலில் இருந்து சமுதாயத்தை விடுவிப்பதில் அதிகாரிகள் மற்றும் மக்களின் பங்கு |
| 14. | 2008 | பொம்மலாட்டம் | சில மாற்றங்கள் சில நேரங்களில் காயத்திற்கான நியாயம் |

## முடிவுரை :

திரு பாரதிராஜா அவர்கள் மேற்கண்ட படங்களில் கதை , கரு, கருத்தை அவரே திரையில் தோன்றி திரைப்படத்தின் ஆரம்பத்திலும் நிறைவிலும் தனக்கென்று தனி முத்திரையாக சில வசனங்களைக் கையாண்டார். அதாவது "என் இனிய தமிழ் மக்களே! உங்கள்

ISSN: 2582-9513

பாசத்துக்குரிய பாரதிராஜா பேசுகிறேன் " என்று ஒவ்வொரு பட ஆரம்பத்திலும் இரு கை கூப்பியவாறு திரையில் கைகள் கீழிருந்து மேலாக தோன்றி அவரே அப்படத்தைப் பற்றிய முன்னோட்டத்தை முன்னறிவிப்பார். இதன்மூலம் பாரதிராஜாவில் கட்டியக்காரனின் மிக முக்கியமான முதன்மைத் தன்மையை வெளிப்படுகிறது.

படத்தின் உச்சக்கட்ட காட்சி நிறைவில் உணர்ச்சிமிக்க குரலில் அந்த திரைப்படத்தின் காட்சிகளை கச்சிதமாக இணைத்துத் தந்து திருப்தியோடு திரு பாரதிராஜா அவர்கள் பேச ஆரம்பிக்கிறார். திரையில் எழுத்து வடிவமாக அந்த வசனம், சில நேரங்களில் கவிதை நடையிலும் அந்தந்த திரைப்படம் உணர்த்த வந்த கதை , கரு மற்றும் கருத்து சம்பந்தப்பட்டதைப் பேசி "அன்புடன் பாரதிராஜா " என்று தன் கையெழுத்தை திரையில் வெளியிட்டு நிறைவு பெற்றது என்று திரைப்படத்தை முடித்து வைப்பார். இது கட்டியக்காரன் நாடகம் முடியும்போது அந்த நாடகம் அல்லது தெருக்கூத்து பற்றிய கதை , கரு, கருத்தை மக்களுக்கு நேரடியாக விளக்கிக் கூறி மனமார நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைப்பதற்கு இணையாகிறது. மேலும் திரைப்படங்களில் இயக்குனர் பாரதிராஜா அவர்களின் கதை கூறும் தன்மை, கதாபாத்திரங்கள் அறிமுகம் செய்யும் தன்மை, உணர்ச்சி ததும்ப சமுதாய விழிப்புணர்வை தூண்டும் வகையில் செயல்படும் தன்மை போன்றவை, மக்களுடன் நேரடியாகப் பேசி தெருக்கூத்தை , நாடகத்தை நிறைவு செய்யும் கட்டியக்காரன் தன்மைகளை வெளிப்படுத்துவதற்கு ஒப்பாவது இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

## <u>நூல் பட்டியல் :</u>

1. Shanmugam T. K. (2004), The growth of drama in Tamilnadu, Sangeet Natak Akademi, New Delhi.

2. பாக்யமேரி (2008) வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

3. Varadpande & Manohar Laxman (1987) History of Indian Theatre, Abhinav Publications, New Delhi.

4. கருந்தேள் ராஜேஷ் , (2018) திரைக்கதை எழுதலாம் வாங்க. ரெப்ரோ புக்ஸ் லிமிடெட், மும்பை.

5. சுஜாதா ( 2011) திரைக்கதை எழுதுவது எப்படி , உயிர்மை பதிப்பகம் ,

ISSN: 2582-9513

சென்னை.

6. கே. பாக்யராஜ் (2016) வாங்க சினிமாவைப் பற்றி பேசலாம் , டிஸ்கவெரி புக் பேலஸ், சென்னை.

7. கோ. பழனி & சி. முத்துகந்தன் ( 2011) தெருக்கூத்துக் கலைஞர்கள் களஞ்சியம், போதி வனம், சென்னை.

8. இர. ஆலாலசுந்தரம், தமிழர் சமூக வாழ்வு.

9. ப. செல்வராஜ் ( 2005) சவிட்டு நாடகத்தில் தெருக்கூத்துப் பண்பும் மூவரசர் நாடகப் பதிப்பும், தி பார்க்கர், சென்னை

10. கரு. அழ. குணசேகரன் ( 2008) நாட்டுப்புற மண்ணும் மக்களும் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

## இணையதள முகவரிகள்

1. https://www.youtube.com/watch?v=m_j5Da03QpE
2. http://www.lakshmansruthi.com/cineprofiles/bharathiraja01.asp
3. https://books.google.co.in/books?id=6ZrjC24PuDQC&printsec=frontcover#v=onepage&q&f=false
4. https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D
5. https://youtu.be/EsPy46yyYGA
6. https://youtu.be/pJ1CyxVWlvk
7. https://youtu.be/zMYr8WKvg4U
8. https://youtu.be/FI-vCW1MMmg
9. https://youtu.be/KsjGPVw8F9Q
10. https://youtu.be/2sOgxShFAFs
11. https://youtu.be/EuQxX0UWgdU
12. https://youtu.be/njEKoSMcJCI
13. https://youtu.be/OQVU-yjLUHw
14. https://youtu.be/gsqj27462I0
15. https://youtu.be/S4eRbTU8w_8
16. https://youtu.be/IygeI6PUmhE
17. https://youtu.be/01cru-9Y-Eg
18. https://www.amazon.in/dp/8188641006/ref=cm_sw_r_apan_i_YV9EM9TZ0F18DT6CFV3S?_encoding=UTF8&psc=1
19. https://youtu.be/FqEQBfoveUY